பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ தொடக்கம்: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர் : 20] சென்னை : ஐப்பசி 2 புதன் (18—10—72) வெளியூர் : ஐப்பசி 3 (19—10—72) வியாழன் [இதழ் : 103

மாணவர் கிளர்ச்சி -- சமாளிக்க மத்திய அரசு : நடவடிக்கை :

புதுடில்லி, அக். 18—

"இப்போது நாட்டில் பரவலாக நடைபெறும் மாணவர் கிளர்ச்சியை அடக்கத்துடனும் அதே நேரத்தில் உறுதியுடனும் சமாளிக்க வேண்டும்" என்று மத்திய அரசு, தொடர்புள்ள எல்லா அதிகாரிகளையும் கேட்டுக்கொண்டிருக்கிறது.

"நாட்டின் பல பகுதிகளிலும் மாணவர்களிடையே அமைதியின்மை நிலவுவது அரசுக்கு அதிகக் கவலையளிப்பதாக இருக்கிறது" என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

எம்.ஜி.ஆர். உள்ளக்கிடக்கை -- அமைச்சர் மாதவன் வெளியிடும் தகவல்

அமைச்சர் பதவி தருமாறு கேட்டார்

'சட்டம் இடம் தராது' என்றதும் ஆத்திரப்பட்டார்

சென்னை, அக். 18

"1971-ஆம் ஆண்டுத் தேர்தல் முடிந்ததும், எம்.ஜி.ஆர். அவர்கள், 'அமைச்சர் பதவி வேண்டும்' என்று கேட்டார்; எப்போதும் ஏதாவது நியாயம் பேச வேண்டுமென்றால், என்னைத்தான் முதலமைச்சர் அனுப்புவார்; அதன்படி நான், எம்.ஜி.ஆர். அவர்களிடம் சென்று சொன்னேன் -- 'அமைச்சர் பதவி ஏற்றால் வேறு தொழிலில் ஈடுபடக்கூடாது; இது சட்ட விதி' என்று!

"அவருக்குக் கோபம் வந்துவிட்டது, 'அது என்ன விதி -- அதை மாற்றக்கூடாதா?' என்று கேட்டார்; 'இது, மத்திய அரசின் விதியாகும்; அனைவரும் அப்படித்தான் செய்கிறார்கள்; நான் அமைச்சரானேன் என்றால், 'வழக்குரைஞர் தொழிலைச் செய்ய மாட்டேன்' என்று எழுதிக் கொடுத்துவிட்டுத்தான் பதவி ஏற்றேன்' என்றும் சுட்டிக் காட்டினேன்; 'வேறு வழி கிடையாதா?' என்றார், 'இல்லை' என்றேன்; அதனால் என்மீது அவருக்கு அளவற்ற கோபம் ஏற்பட்டது!

"அப்போதும் சொன்னேன் -- 'நீங்கள் ஏன் அமைச்சராக வேண்டும்? அமைச்சர்களுக்கெல்லாம் அமைச்சராக இருங்கள்; அந்த மதிப்பையும் கௌரவத்தையும் உங்களுக்குத் தருகிறோம்' என்று; அதற்குப் பரிகாரமாகவா இந்தப் பழியை எங்கள்மீது சுமத்துகிறார் எம்.ஜி.ஆர்?"

—தியாகராயநகர் கூட்டத்தில்

காங்கிரசாரின் கடைசித் துருப்புச் சீட்டு எம். ஜி. ஆர்.

டெல்லிப் பெருந்தலைவர் வெளியிட்ட 'சூசகத் தகவல்'

சென்னை, அக். 18—

"பல்வேறு மாநிலங்களில் காங்கிரசார் விளையாடிப் பார்த்துவிட்டார்கள்; தமிழ்நாட்டில் எல்லா முறைகளையும் கையாண்டும் பார்த்துத் தோல்வியுற்றபின், தமிழ்நாட்டு அரசியல் அரங்கில் தங்களது கடைசித் துரும்புச் சீட்டை இறக்கியிருக்கிறார்கள்; அவர்களது கடைசித் துருப்புச் சீட்டுத்தான் எம்.ஜி.ஆர்.!

"அவர்களுக்குச் சொல்லிக்கொள்வேன் -- 'எதிரிகளை வெல்லும் இராசதந்திரம் படைத்த எங்கள் கழகத் தலைவரிடம் உங்கள் திட்டம் செல்லுபடியாகாது' என்று!

"கடந்த சில மாதங்களுக்கு முன்பு நானும் -- கலைஞரும் டெல்லிக்குச் சென்றிருந்தோம்; அங்கே ஒரு பெரிய தலைவரைப் பார்த்தும் பேசிக்கொண்டிருந்தோம்; அந்தப் பெரிய தலைவர் யார் என்று நான் சொல்லமாட்டேன்; அவர் -- நான் -- கலைஞர் மூவர்தான் இருந்தோம்; அவர் அப்போது, 'தி.மு.க. ஆட்சியை நாங்கள் கவிழ்க்கப் போகிறோம் -- என்று சொல்லப்படுகிறதாமே; நாங்கள் ஒன்றும் அப்படிக் கவிழ்க்க மாட்டோம்' என்றார்.

"கலைஞர் அவர்கள் சிரித்துக்கொண்டே, 'நாங்கள் சொல்லவில்லை; உங்கள் ஆட்கள்தான் 'ஆறே மாதத்தில் கவிழ்ப்போம்' என்று கூறுகிறார்கள்' என்றார்; 'நிலையாக இருக்கின்ற ஆட்சியை நாங்கள் கவிழ்க்க மாட்டோம்; அதில் எங்களுக்கு நம்பிக்கையில்லை; ஆனால், உங்களுக்குள் பிளவு ஏற்பட்டு ஆட்சி கவிழ்ந்தால் நாங்கள் பொறுப்பு இல்லை' என்றார் அந்தப் பெரிய தலைவர்.

"அப்போதே நினைத்தோம் -- துருப்புச் சீட்டு யார் மூலமோ வரப்போகிறது' என்று! இப்போது அவர் சொன்னதன் பொருள் புரிகிறது!

"நாம் யாரைப் போற்றி வளர்த்தோமோ -- ஏற்றிப் புகழ்ந்தோமோ அவரே அந்தக் காரியம் நிகழக் காரணமாக இருப்பதை அறிந்து அவர் மீது சந்தேகப்படுகிறோம்!"

—அமைச்சர் செ. மாதவன்

(தியாகராயநகர் கூட்டத்தில்)

களைகள் தோன்றினால் களைந்தெறியப்படும்

தவறுகள் முடிவடைந்தால் நடவடிக்கைகளும் முடிவடையும்

உண்மை நிலையைத் தொண்டர்கள் அறிவர் --- செய்தியாளர்களிடையே கழகத் தலைவர் கலைஞர் விளக்கம்

சென்னை, அக். 18—

"ரசிகர் மன்றங்கள் என்ற பெயரால் கழகத் தலைவர்களின் படங்களை உடைப்பதும், கழகத் தலைவர்கள் -- அமைச்சர்கள்மீது ஆபாசமான துண்டறிக்கைகளை நூற்றுக்கணக்கில் வெளியிடுவதுமாக இருக்கிறார்கள்; அமைச்சர் சத்தியவாணி முத்து வீட்டில் கல்லெறிந்திருக்கிறார்கள்; மாவட்டச் செயலாளர் நீலநாராயணன் வீட்டைத் தீயிடவே முயன்றிருக்கிறார்கள்; மாநகராட்சி ஜீப் ஒன்று எரிக்கப்பட்டிருக்கிறது; இதுபோன்ற காரியங்கள், 'ரசிகர் மன்றங்கள்' என்பதன் பெயரால் நடைபெறுகையில் கழகத் தோழர்கள் ஆத்திரமடைவதும் -- உணர்ச்சியடைவதும் தவிர்க்க முடியாததாக ஆகிவிடக்கூடும்.

"ஆயினும் நான், தி.மு.க. தோழர்களை அமைதியாக இருக்கும்படி ஏற்கனவே கேட்டுக்கொண்டிருக்கிறேன்; பொதுக்குழுவிலும் -- செயற்குழுவிலும், பிறகு நடைபெற்ற பொதுக்கூட்டத்திலும் நானும் -- பொதுச்செயலாளரும், 'அனைவரும் அமைதியாக இருக்க வேண்டும்' என்று வலியுறுத்திக் கூறியிருக்கிறோம்.

"எந்த அசம்பாவிதங்கள் நடக்காமலும், அப்படி அசம்பாவிதங்கள் நடைபெறுவதைத் தடுப்பதிலும் காவல்துறையினர், சட்டம் -- அமைதியைக் காக்க விழிப்புடன் இருப்பார்கள்!"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நேற்று செய்தியாளரிடம் கூறினர்.

"மதுரை மேயர் முத்து அவர்கள் வீட்டின் முன்னால் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடத்தப்போவதாகக் கூறப்படுகிறதே; இது போன்ற செயல்களைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க எண்ணியிருக்கிறது?" என்று செய்தியாளர்கள் கேட்டபோதே முதலமைச்சர் மேற்கண்டவாறு கூறினர்.

செய்தியாளர்கள் மேற்கொண்டு கேட்ட கேள்விகளும் -- முதலமைச்சர் அளித்த பதில்களும் வருமாறு :—

கேள்வி :—"கழக நடவடிக்கை ஒருவர் பெயரிலதானா? வேறு எவர்மீதும் இல்லையா? இத்துடன் முடிந்துவிட்டதா?"

முதல்வர் :—"தவறுகள் முடிந்தால் நடவடிக்கைகளும் முடிவடையும்."

நாவலர் :—"கட்சிக் கட்டுப்பாட்டை மீறியவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள்மீது அவ்வப்போது நடவடிக்கை எடுத்து வருகிறோம்."

கேள்வி :—"அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று ஆரம்பித்திருப்பதாகக் கூறப்படுகிறதே!"

கலைஞர் :—"அதுபற்றித் திட்டவட்டமாகத் தெரியவில்லை."

கேள்வி :—"அண்ணா சமாதி முன்பு ஒருவர் மருந்து சாப்பிட்டு இறந்து விட்டதாக கூறப்படுகிறதே -- உண்மையா?"

கலைஞர் :—"இல்லை."

கேள்வி :—"சட்டமன்றத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் மீது நடவடிக்கை உண்டா? அவர் எம். ஜி. ஆர். பக்கம் இருக்கிறாரே?"

கலைஞர் :—"அப்படி ஒன்றும் திட்டவட்டமாகத் தெரியவில்லை; அவரும் அப்படி அறிவிக்கவில்லை."

கேள்வி :—"ஆங்காங்கு கழகத்தில் எம்.ஜி.ஆர். ஆதரவாளர்கள் அதிகமாக இருப்பதாகத் தெரிகிறதே -- அப்படிப்பட்டவர்கள்மீது களையெடுப்பு நடைபெறுமா?"

கலைஞர் :—"கட்சியைச் சார்ந்த[illegible]கள் யாரும் அப்படியில்லை; இந்[illegible] பிரச்சினையில், இலட்சக் கணக்கான உறுப்பினர்கள் கழகத்தின் பக்கம்தான் இருக்கிறார்கள்; இன்று கழகத்தை நடத்திச் செல்கின்ற தலைவர்கள், எத்தனை ஆண்டுக் காலமாக இந்தக் கழகத்தைக் கட்டிக்காத்து வருகிறார்கள் என்பதும் -- அதற்காக எவ்வளவு தியாகங்களைச் செய்திருக்கிறார்கள் என்பதும் அந்தத் தலைவர்களுடன் இரண்டறக் கலந்து பல தியாகங்களுக்குத் தங்களை உட்படுத்திக்கொண்ட கழகத் தொண்டர்களுக்கு நன்றாகத் தெரியும்."

கேள்வி :—"கே. ஏ. கிருஷ்ணசாமி தவிர வேறு பெரிய புள்ளிகள் யார் மீதாவது நடவடிக்கை உண்டா?

கலைஞர் :—"தவறுகள் தொடருமானால், நடவடிக்கைகள் தொடரும்; தவறு யார் செய்தாலும் நடவடிக்கை எடுக்கப்படும்."

கேள்வி :— "எம். ஜி. ஆர். பேசிய கூட்டங்களில் கலந்துகொண்டவர்கள்மீதெல்லாம் நடவடிக்கை உண்டா?"

கலைஞர் :—"அவர் பேசியதற்கு மேடையில் இருந்தவர்கள் எல்லாம் எப்படிப் பொறுப்பு ஆவார்கள்?"

கேள்வி :— "எம். ஜி. ஆர். பக்கமிருந்து இந்தப் பக்கம் வந்த சிலர் முழுமனத்தோடு வரவில்லை; தற்காலிகமாகத்தான் வந்து சேர்ந்தார்கள் -- என்று கூறுகிறார்களே?"

கலைஞர் :— "அவர்கள் யார் என்று கருதுகிறீர்கள்?"

கேள்வி :— "நடவடிக்கைகள் எடுப்பது இத்துடன் முடிந்ததா?"

(4-ம் பக்கம் பார்க்க)

தி.மு.க. பொதுக்குழுத் தீர்மானங்கள்

சென்னை, அக். 17—

அக்டோபர் 14, 15-ம் நாட்களில், சென்னை -- மயிலை ஏ. வி. எம். இராஜேசுவரி திருமண மண்டபத்தில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் முழு விவரம் வருமாறு :—

கழக வரவு-செலவுக் கணக்குகள்

1969—70, 1970—71 ஆகிய ஆண்டுகளுக்கான தலைமைக் கழக வரவு-செலவுக் கணக்குகள், 'நம் நாடு' இதழ் வரவு-செலவுக் கணக்குகள், 1971 பொதுத் தேர்தல் நிதி வரவு-செலவுக் கணக்குகள் ஆகியவைகளை முறைப்படி தணிக்கை செய்து கழகத் தணிக்கைக் குழு அளித்துள்ள அறிக்கையையும், அதன் தொடர்பாக பொதுச் செயலாளர் அவர்கள் விவரமாகப் படித்து அளித்த வரவு-செலவுக் கணக்கு விவரங்களையும் இப்பொதுக் குழு ஒருமனதாக ஏற்றுக்கொள்கிறது.

—தலைவர்

கழகச் சட்ட திட்டத் திருத்தம்

கழகச் சட்ட திட்ட விதி 8-இல் [illegible]ச் சார்பு மன்றங்கள் குறித்து,

"கழகச் சார்புடைய மன்றங்க[illegible] -- படிப்பகங்கள் ஆகிய சுளை அமைப்புகளைத் துவக்க விரும்புவோர், சம்பந்தப்பட்ட உள்ளூர்க் கிளையின் (சென்னையில் வட்டக்கிளை) மூலமாகப் பொதுச்செயலாளரின் அனுமதி பெறுதல்வேண்டும்; சார்பு மன்றம் அமைந்த பிறகும் அதன் நிர்வாகிகள் பிரச்சாரக் கூட்டங்கள் நடத்துவதென்றால் சம்பந்தப்பட்ட கிளையின் செயலாளருடைய அனுமதியைப் பெற வேண்டும்; எக்காரணம் கொண்டாவது அனுமதி மறுக்கப்பட்டால் -- சார்பு மன்றங்கள் -- முறைப்படி மேல் அமைப்புகளுக்கு முறையீடு செய்துகொள்ள வேண்டும்"

என்று கூறப்பட்டுள்ளது; இதனுடன். கீழ்க் குறிப்பிட்டுள்ள பிரிவுகளையும் இணைக்க வேண்டுமென இச்செயற்குழு முடிவு செய்வதுடன், பொதுக் குழுவுக்குப் பரிந்துரை செய்கிறது :—

"பிரிவு 2 -- பிரிவு 1 இன்படி, உள்ளூர்க் கிளை (சென்னையில் வட்டக் கிளை)யினால் முறைப்படி ஏற்றுக்கொள்ளப்பட்ட சார்பு மன்றமோ -- படிப்பகமோ, சம்பந்தப்பட்ட கிளையின் எல்லைக்கு அப்பால் (சென்னையில வேறு வட்டத்தில்) அதே பெயருடன் இயங்கும் சார்பு மன்றம் அல்லது படிப்பகத்துடன் அமைப்பு ரீதியான எத்தகு தொடர்பும் வைத்துக் கொள்ளக்கூடாது; இதற்கு மாறாக, அதே பெயருடன் வேறு இடங்களில் உள்ள சார்பு மன்றங்கள் -- படிப்பகங்களுடன் அமைப்பு ரீதியாக உறவு கொண்டு நகரமைப்பு, வட்ட அமைப்பு, மாவட்ட அமைப்பு, மாநில அமைப்பு என்கின்ற பெயர்களோடு இணைவதற்கு முயலும் துணை -- சார்பு மன்றங்கள், படிப்பகங்களைக் கழகச் சார்புடையவை அல்ல என்று சம்பந்தப்பட்ட கிளை அதனுடைய மேலமைப்புகள் மூலமாகத் தலைமைக் கழகத்திற்கு அனுப்பும் பரிந்துரையின்பேரில் பொதுச் செயலாளர் அறிவிப்பதற்கு உரிமை உண்டு."

"பிரிவு 3—பிரிவு 2-இல் குறிப்பிட்டுள்ளபடி, எந்த ஒரு பெயருடைய துணை -- சார்பு மன்றங்களோ, படிப்பகங்களோ, 'கழகத் தொடர்புடையவை அல்ல' என்று தலைமைக் கழகத்தால் அறிவிக்கப்பட்ட பிறகு, அத்தகு துணை -- சார்பு மன்றம் அல்லது படிப்பகங்களில் கழக உறுப்பினர்கள் யாரும் பொறுப்புக்களை வகிப்பதோ, உறுப்பினர்களாக இருப்பதோ கூடாது."

முன்மொழிதல்: சே. அ. இராஜமாணிக்கம் எம்.எல்.சி.
வழிமொழிதல்: எம். எஸ். அப்துல் காதர் எம்.பி.

தி. மு. கழக அறக் கட்டளைக்கு நிதியுதவி

சென்னை அண்ணா சாலை ('ஆபட்ஸ்பரி'க்குப் பக்கத்தில்) தி. மு. கழக அறக்கட்டளையின் சார்பாக வாங்கப்பட்டுள்ள திடலில், அறிஞர் அண்ணா பணி மண்டபமும், 'அறிவாலய'மும் கட்டுவதற்கு ஆகும் செலவுக்கான நிதி வழங்குமாறு தி. மு. க. அறக்கட்டளையின் சார்பில் தலைமைக் கழகத்தைக் கேட்டுக் கொண்டிருப்பதற்கிணங்க, ஒவ்வொரு மாவட்டக் கழகமும் ஒரு ரூபாய்க்கான நற்கொடைச் சீட்டுக்களை பொதுமக்களிடம் வழங்கி -- முடிந்த அளவு கணிசமாகத் தொகை வசூலித்து, இந்த ஆண்டு நவம்பர் மாத இறுதிக்குள் தலைமைக் கழகத்திற்கு அனுப்பி -- அறக்கட்டளைக்கு வழங்குவதென பொதுக்குழு முடிவு செய்கிறது.

— தலைவர்

விலைவாசி ஏற்றம் -- தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

மத்திய அரசின் பொருளாதார -- நிதி -- வரிக் கொள்கைகளின் விளைவாக நாட்டில் விலைவாசிகள் தொடர்ந்து உயர்ந்து வருவது கண்டு இந்தப் பொதுக்குழு கவலை தெரிவிக்கிறது; இந்த விலையேற்றத்தைத் தடுத்து நிறுத்த மத்திய அரசு உடனடியாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்றும், பொதுமக்களுக்குத் தேவையான இன்றியமையாப் பொருள்களின் விலைகளைக் கட்டுப்படுத்த அந்தப் பொருள்களின் மொத்த வியாபாரத்தை மாநில அரசே ஏற்று நடத்த ஏற்ற வழிவகை காண வேண்டும் என்றும் தமிழக அரசை இந்தப் பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

முன் : எம். எஸ். சிவசாமி எம்.பி.
வழி : இரா. தருமலிங்கம், எம். எஸ் மணி

உகாந்தா நாட்டில் கொடுமைக்கு ஆளாகியுள்ள மக்களுக்குப் பாதுகாப்பு

ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்றாகிய உகந்தா நாட்டில் பன்னெடுங்காலமாக வாழ்ந்துவரும் ஆசிய வம்சாவழியினரை அந்த நாட்டின் குடியரசுத் தலைவர் அமீன் அவர்கள் மனிதாபிமான உணர்ச்சியற்ற முறையில் கொடுமைக்குள்ளாக்கி -- அவர்களுடைய உடைமைகளைப் பறிமுதல் செய்து நாட்டை விட்டு விரட்டுகின்ற அநாகரிகச் செயல்களை இந்தப் பொதுக்குழு வன்மையாகக் கண்டிக்கிறது; இந்தக் கொடுமைகளுக்கு ஆளாகியுள்ள இந்திய வம்சாவழியினருக்குப் பாதுகாப்புத் தரும் முயற்சிகளில் ஈடுபட வேண்டும் என்று மத்திய அரசை இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

முன் : மா. முத்துச்சாமி எம்.பி.
வழி : எம். எஸ். வெங்கடாசலம்.

வங்க தேசம் ஐ. நா.-வில் இடம் பெற....

உலக சனநாயக நாடுகளின் நல்வாழ்த்துக்கள் அடிமைத் தளையை அறுத்துச் சுதந்தர நாடாக உதயமான வங்க நாடு உலக நாடுகள் சபையில் இடம் பெறுவதைத் தடுக்கும் முயற்சியில் கம்யூனிஸ்டுச் சீனா போன்ற நாடுகள் ஈடுபட்டிருப்பதை இந்தப் பொதுக்குழு வன்மையாகக் கண்டிப்பதுடன், உலக மக்களின் உணர்வுகளுக்கு மதிப்புத் தந்து வங்காள தேசத்துக்கு உலக நாடுகள் அவையில் உடனடியாக இடம் தரவேண்டும் என்றும், அதற்கான முயற்சியில் இந்திய அரசு தொடர்ந்து ஈடுபடவேண்டும் என்றும் இந்தப் பொதுக் குழு கேட்டுக்கொள்கிறது.

முன் : செ. கந்தப்பன் எம்.எல்.ஏ.
வழி : பி ஏ. சாமிநாதன் எம்.பி

தமிழ்நாட்டில் வறட்சி[illegible]--உரிய உதவிகளைச் செய்ய மத்திய அரசுக்குக் கோரிக்கை

தமிழ்நாட்டில் தொடர்ந்து பல பகுதிகளில் பருவமழை தவறிய காரணத்தால் ஏற்பட்டிருக்கும் வறட்சி நிலைக்கு நிவாரணம் கண்டிடத் தமிழக அரசு எடுத்துக்கொண்டுள்ள நடவடிக்கைகளைப் பாராட்டி வரவேற்பதுடன், மாநில அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளுக்கு மத்திய அரசு உரிய உதவிகளைச் செய்யவேண்டும் என்று மத்திய அரசை இந்தப் பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

முன் : கா. வேழவேந்தன் எம்.எல்.ஏ.
வழி : மத்தூர் சண்முகம், பரமக்குடி தங்கவேலன், சி. வி. இராசகோபால் எம்.எல்.சி.

நெசவாளர்களுக்கு துயர் தீர நடவடிக்கை

தமிழக நெசவாளர்களுக்கு வாழ்வளிக்க நிரந்தரமான பரிகாரங்கள் காணத் தமிழக அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளைப் பாராட்டுவதுடன், தமிழகத்தில் தேங்கிக் கிடக்கும் கைத்தறித் துணிகளை விற்பனை செய்வதற்கும் -- உதவித் தொகை வழங்குவதற்காகவும் ஒன்றரை கோடி ரூபாயை மத்திய அரசு தரவேண்டும் என்றும், கைத்தறித் தறைக்கு வேட்டி -- சேலை -- துண்டு -- துப்பட்டா போன்ற ரகங்களை ஒதுக்க விதிகள் இயற்றிட வேண்டும் என்றும், கைத்தறி நெசவாளர்களுக்கு நியாயமான விலையில் நூல் வழங்கிட மாநில அரசுக்கு அதிகாரம் வழங்கிட வேண்டும் என்றும் மத்திய அரசைத் தமிழக அரசு கேட்டுக்கொண்டிருந்தும், இதுவரை மத்திய அரசு எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்காமல் இருப்பது கண்டு இப்பொதுக்குழு வருந்துவதுடன், உடனடியாக இதுபற்றி மத்திய அரசு நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று இப்பொதுக் குழு கேட்டுக்கொள்கிறது.

முன் : கே. டி. எஸ். மணி.
வழி : சென்னியப்பன், முருகேசன் (ஆந்திரம்) திருச்செங்கோடு [illegible]சன்.

நெய்வேலி பழுப்பு நிலக்கரி இரண்டாவது சுரங்கத் திட்டம்

தமிழகத்தின் தொழில் வளத்துக்கு வழி வகுக்கும் நெய்வேலி பழுப்பு நிலக்கரி இரண்டாவது சுரங்கத் திட்டத்தை உடனடியாகத் தொடங்கிட வேண்டும் என்று மத்திய அரசை இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

முன் : எம் செல்வராஜ் எம் எல்.ஏ.
வழி : ஏ. வி. தண்டபாணி.

தொழிற் சங்கப் பேரவையில் தொழிற் சங்கங்கள் இணைப்பு

கழகத் தலைவர் -- பொதுச்செயலாளர் ஆகியோரது முன்னிலையில் நமது கழகத்தின் சார்பாக உள்ள தொழிற் சங்கங்கள் அனைத்தும் தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவையில் இணைவது என்று எடுக்கப்பட்ட முடிவைத் தொழிற் சங்கங்கள் அனைத்தும் ஏற்று -- அதற்கேற்ப நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

முன் : தா. கிருட்டினன் எம்.பி.
வழி : எம். மஸ்தான், பி எஸ் மணியம் எம்.எல்.ஏ. என். வி. என். சோமு பி.ஏ.பி எல்., மேட்டூர் பாலு.

மூடப்பட்டுள்ள நூற்பாலைகள் உடனடியாக ஏற்று நடத்திட.....

தமிழகத்தில் மூடப்பட்டுள்ள நூற்பாலைகளை எடுத்து நடத்தியும் -- தொழிலாளர்கட்கு ஐந்து இலட்ச ரூபாய்வரையில் நிவாரண நிதி தந்தும் -- பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கட்கு வாழ்வளித்த தமிழக அரசைப் பாராட்டுவதுடன், மீதியிருக்கும் மூடப்பட்டுள்ள பங்கஜா -- காளீசுவரா -- சாரதா ஆலைகளை அவசரச் சட்டத்தின் மூலம் உடனடியாக எடுத்து நடத்திட வேண்டுமென்று மத்திய அரசை இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

முன் : க. துரைசாமி எம்.எல்.ஏ.
வழி : மு. இராமநாதன் எம்.எல்.சி., தி. கு. மெய்யப்பன்

சொத்துக் கணக்குகள்

தமிழக அமைச்சர்கள் -- சட்டமன்ற ஈரவைத் தலைவர்கள் -- உறுப்பினர்கள் ஆகியோர், தங்கள் சொத்துக் கணக்குகளையும் -- தங்கள் குடும்பத்தினர் சொத்துக் கணக்குகளையும் குறிப்பிட்ட கால முறைகளில் உரிய அவைமுன் தெரிவித்தல் வேண்டுமென முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் 1969 ஆகஸ்டு 27-ல் தமிழகச் சட்டமன்றத்தில் முன்மொழிந்து நிறைவேற்றிய தீர்மானமும் நடைமுறையில் இருப்பதையொட்டி, அதைத் தொடர்ந்து—

(அ) மாநகராட்சி மேயர்கள் -- துணை மேயர்கள் -- மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் -- நகராட்சித் தலைவர்கள் -- நகராட்சித் துணைத் தலைவர்கள் -- ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் -- ஊராட்சி ஒன்றியத் துணைத் தலைவர்கள் ஆகியோர் தங்கள் சொத்துக் கணக்குகளையும் -- தங்கள் குடும்பத்தினர் சொத்துக் கணக்குகளையும் குறிப்பிட்ட கால முறையில் அவர்கள் பொறுப்பு வகிக்கும் மன்றங்களின் முன்பு தெரிவிக்குமாறு வழிவகை காண மாநில அரசை இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

(ஆ) நாடாளுமன்ற உறுப்பினர்களும் தங்கள் சொத்துக் கணக்குகளையும் குறிப்பிட்ட கால முறைகளில் தெரிவிக்க வேண்டுமென்று விதிமுறை வகுக்குமாறு மத்திய அரசை இப்பொதுக் குழு கேட்டுக்கொள்கிறது.

முன் : சி. வி. எம். அண்ணாமலை
வழி : சு. நாராயணசாமி (மன்னார்குடி). பா. பண்டரிநாதன் (இடைப்பாடி), நாகூர் அனிபா எம் எல்.சி, ம. வே நாராயணசாமி, நகர மன்றத் தலைவர், துரைராசு எம்.பி, பேராசிரியர் க. அன்பழகன்

வறட்சிப் பகுதியில் பாசன வசதி

கோவை மாவட்டத்தின் மிகவும் வறட்சியான பல்லடம் -- அவிநாசி -- கோவை போன்ற வட்டங்களில் உள்ள விவசாய பெருமக்கள் பாசன வசதியின்றி மிகவும் சிரமப்படுகின்றனர்; நமது தமிழக அரசு மேற்படி பகுதி மக்களுக்கு உதவும்பொருட்டு பாண்டியாறு -- புன்னம்புழா திட்டத்திற்கு எடுத்துக்கொண்டுள்ள முயற்சியைப் பாராட்டுவதுடன், அதை விரைவுபடுத்தி, மேற்படி பகுதி மக்களுக்குப் பாசன வசதி செய்து தருமாறு தமிழக அரசை இப்பொதுக் குழு வேண்டிக் கொள்கிறது.

முன் : மே. சி. தூயமணி எம்.எல் ஏ.,
வழி : பருவதக்கண்ணன், சி முத்துக்குமாரசாமி, கோவை க. இரத்தினம்

மாநில சுயாட்சி---சட்டமன்றத்தில் விவாதிக்கக் கோரிக்கை

மத்திய – மாநில உறவுகள் குறித்து முன்னாள் தலைமை நீதிபதி இராசமன்னார் குழு அறிக்கை பற்றி ஆராய்ந்திட அமைக்கப்பட்ட தி.மு.க. துணைக் குழுவின் சார்பில் அறிக்கையினைத் தயாரித்து அளித்த தோழர்கள் இரா. செழியன் எம்.பி., மாறன் எம்.பி. ஆகிய இருவருக்கும் பொதுக்குழு நன்றி தெரிவித்துக்கொள்கிறது; விரைவில் சட்டமன்றத்தில் இராசமன்னார் குழுவின் அறிக்கை பற்றி விவாதிக்கப்படும்போது, கழகத்தின் மாநில சுயாட்சிக் கொள்கையை மையமாக வைத்தும் -- துணைக் குழுவின் பரிந்துரைகளை அடிப்படையாக வைத்தும், ஆளும் கட்சியான தி.மு.க சார்பில் கழகத் தலைவரும் -- பொதுச்செயலாளரும் கலந்து பேசி எடுக்கும் முடிவுக்கு ஏற்ப கருத்துக்களை எடுத்துரைக்கலாம் என்று பொதுக்குழு தீர்மானிக்கிறது.

முன் : பேராசிரியர் க. அன்பழகன்
வழி : கா. வேழவேந்தன் எம்.எல்.ஏ , கோ. விசுவநாதன் எம்.பி.

இலங்கைத் தமிழர் உரிமைப் போராட்டத்திற்கு ஆதரவு

இலங்கைத் தீவைத் தாயகமாகக் கொண்ட இலங்கைத் தமிழர்கள், தங்களது மொழி உரிமை -- கலாச்சார உரிமை ஆகியவற்றை இழந்து காலமெல்லாம் வேதனைக்கு ஆளாக்கப்படுகின்ற நிலைமை மாற -- அதற்குப் பரிகாரம் தேடி நியாயமான உரிமைகட்குப் போராடும் இலங்கைத் தமிழர்கட்குத் தனது ஆழ்ந்த பரிவை இந்தப் பொதுக்குழு தெரிவித்துக்கொள்கிறது.

முன் : தில்லை வில்லாளன் எம்.பி.
வழி : பி. எஸ். மணியம்

தொழிலாளர் போனசுப் பிரச்சினை -- ஆதரவாக வாதாடிய தமிழக அரசுக்கு பாராட்டு

தொழிலாளர்கட்குரிய போனசுப் பிரச்சினையில் குறைந்தபட்ச போனசாக 4 சதவிகிதம் என்று இருந்துவந்த நிலையை 8.33 சதவிகிதமாக உயர்த்தவேண்டும் என்கின்ற தொழிலாளர்களின் கோரிக்கைக்கு ஆதரவாக நின்று வாதாடி -- மத்திய அரசு அதனை ஏற்க உதவியதற்காகவும், தொழிலாளர்களை ஊக்குவிக்கும் வகையில் பொதுத்துறை தொழில்களின் நிர்வாகத்தில் 24 சதவிகிதம் பங்கு தொழிலாளர்கட்கு அளித்திடுவதற்கு வழிவகுத்துள்ளதற்காகவும் தமிழக அரசை இப்பொதுக்குழு பாராட்டி நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

முன் : காட்டூர் கோபால் எம்.எல்.சி.
வழி ஜி. லாரங்குசம் எம்.எல் சி., இரா.கிருஷ்ணன், மசூர் (கேரளம்)

அக். 29-ல் எல்லா ஊர்களிலும் கழகத் தோழர்கள் கைத்தறித் துணிகளை விற்பனை செய்ய வேண்டும்

கைத்தறியாளர்கள் துயர் துடைக்க முன்னொரு முறை தி. மு. கழகத் தலைவர்களும் -- தோழர்களும் எல்லா ஊர்களிலும் கைத்தறித் துணிகளை விற்பனை செய்ததுபோல், இப்போதும் நெசவாளர்களின் துயர் துடைக்க இத்திங்கள் 29-ம் நாளன்று கைத்தறித் துணிகளை நாடெங்கும் விற்பனை செய்வது என இப்பொதுக்குழு முடிவு செய்கிறது.

முன் : தோப்பூர் திருவேங்கடம்
வழி : ஈரோடு விசுவநாதன், ப. க. தமிழழகன், மு. கோதண்டம், கே. பி. முருகேசன்

சாதி அடிப்படையில் கொடுமை இழைப்பதா ?-- தவிர்க்கும் முயற்சியில் ஈடுபட வேண்டும்

இன்னும் தமிழகத்தின் சில பகுதிகளில் சாதியின் அடிப்படையில் கலவரங்கள் -- குழப்பங்கள் ஏற்பட்டு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர் பாதிக்கப்பட்டு வருகின்றனர்; மாற்றுக் கட்சியினர் இதனை மிகைப்படுத்தி ஆட்சியின்மீது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அதிருப்தியை திருப்பிவிடும் வகையில் மிகத் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்கள்; எனவே, இதனை நீக்குவதற்காகக் கழகத் தோழர்கள் -- ஆங்காங்கே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சாதி அடிப்படையில் கொடுமைகள் இழைக்கப்படுவதை தவிர்க்கும் முயற்சியில் மேலும் ஈடுபட வேண்டும் என்று பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

புதுவைக்கு மாநிலத் தகுதி

மத்திய ஆட்சிப் பகுதியாக உள்ள புதுச்சேரி பகுதிக்கு முழு மாநிலத் தகுதி தரவேண்டும் எனப் புதுவை சட்டமன்றம் ஒருமனதாக நிறைவேற்றியுள்ள தீர்மானத்திற்குப் பொதுக்குழு ஆதரவு தருவதுடன் மாநிலத் தகுதியை புதுச்சேரிக்கு விரைவில் அளித்திடுமாறு மத்திய அரசைப் பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

முன் : புதுவை முத்து

எம்.ஜி.ஆர். ரசிகர்கள் இழிசெயலுக்குக் கண்டனம்

திருச்சி, அக். 18 –

திருச்சி ஏ வி கிருஷ்ணமூர்த்தி எம்.சி. அறிவிப்பதாவது :—

"திருச்சி நகரில் எம்.ஜி.ஆர். ரசிகர் மன்றங்களில் ஒற்றுமையையும் -- கழக கட்டுப்பாட்டினையும் காப்பதற்காக மன்ற உறுப்பினர்களின் வேண்டுகோளின்பேரில் அதன் காப்பாளராக இருந்து வந்தேன்.

திரு. எம். ஜி. ஆர். அவர்கள் பொதுக்குழுவில் பேசவேண்டியவற்றைப் பொது மேடையில் பேசிய காரணம் காட்டிக் கழகத் தலைமை அவரைத் தற்காலிகமாக நீக்கியிருப்பதைக் கழகத் தோழர்கள் அறிந்ததே.

கடந்த 11-ந் தேதியன்று அனைத்துலக எம்.ஜி ஆர். ரசிகர் மன்றத் தலைவர் முசிறிப்புத்தன் அறிக்கையின்படி ஊர்வலம் நடத்த வேண்டுமென மன்ற உறுப்பினர்கள் கேட்டனர்; 'மன்றக் காப்பாளர்' என்ற முறையில் அனுமதிக்கவோ, மறுக்கவோ எனக்கு உரிமை இல்லை; முற்றிலும் அதன் தலைவர் -- செயலாளருக்கே உண்டு; எனவே, அமைதியாக ஊர்வலம் செல்ல ஆலோசனைகள் கூறினேன்.

ஊர்வலத்தைத் தொடர்ந்து இடையில் புகுந்த சில வன்முறையாளர்களாலும் -- சமூக விரோதிகளாலும் நகரப் பொதுமக்கள் பீதியடையத்தக்க வகையில் ஏற்பட்ட சில அசம்பாவிதங்களும், வன்முறைச் செயல்களும் நடந்தது அறிந்து வருந்துகிறேன்.

எம் ஜி ஆர். ரசிகர் மன்றத்தைச் சேர்ந்த சில நண்பர்கள் துண்டு அறிக்கைகளை வெளியிடுவதும் -- கண்டன விளம்பரத் தட்டிகளை இழிவான வார்த்தைகள் மூலம் எழுதி வைப்பதுமான காரியங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று அறிகிறேன்; தொடர்ந்து இது போன்ற செயல்களில் ஈடுபட வேண்டாமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

இதய தெய்வம் பேரறிஞர் அண்ணாவின் தலைமையில் வளர்ந்த நாம் -- எந்தவிதத் தனிப்பட்ட விருப்பு -- வெறுப்புக்களுக்கு ஆட்படாமல் இருந்து, அறிஞர் அண்ணா கூறியதுபோல் கடமை -- கண்ணியம் -- கட்டுப்பாடு காத்து கழகத்தின் இறுதி முடிவை ஏற்றுச் செயல்படுவோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்."

நாங்குனேரி சுந்தரம் டெக்ஸ்டைல் தொழிலாளர்களுக்குப் போனசு

மதுரையில் 4—10—72-ம் நாள் காலையில் நடைபெற்ற போனசு பேச்சுவார்த்தைகளில் நாங்குனேரி சுந்தரம் டெக்ஸ்டைல்ஸ் தொழிலாளருக்கு 1971-ம் ஆண்டில் அவர்கள் பெற்ற மொத்தச் சம்பளத்தில் 16 சதவிகிதம் போனசாகத் தரப்படும் என்று முடிவாயிற்று.

இந்தப் பேச்சுவார்த்தைகளில் தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவை பொதுச்செயலாளர் காட்டூர் கோபால் -- நிர்வாகத்தின் சார்பில் நிர்வாக இயக்குனர் இராமாச்சாரி, சுரேந்திரன் ஆகியோரும் பங்கேற்றனர்.

பின்னர், பிற்பகலில் திருச்சியில் கள்ளக்குறிச்சி ஆற்காடு சர்க்கரை ஆலைத் தொழிலாளர் போனசுக்கான பேச்சுவார்த்தைகளில் தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவையின் பொதுச்செயலாளர் காட்டூர் கோபால் பங்கேற்றார்; 1971-க்குரிய போனசாக சம்பந்தப்பட்ட ஆண்டில் தொழிலாளர் பெற்ற மொத்தச் சம்பளத்தில் 16 சதவிகிதத்தைத் தொழிலாளருக்குப் போனசாகத் தரப்படும் என்று முடிவாயிற்று.

வெற்றுக் கோஷங்களால் ஆட்சிக்கு வந்தது இந்திரா கட்சி

மக்களுக்கு வழங்கிய உறுதி மொழிகளை நிறைவேற்றுவது தி. மு. கழக அரசு

மைசூர் முன்னாள் முதல்வர் விரேந்திர பட்டீல் தரும் நற்சான்று-- பேரறிஞர் அண்ணாவுக்குச் சூட்டும் புகழ் மாலை

பெங்களூர், அக். 16—

'தேர்தல் நேரத்தில் மக்களுக்குக் கொடுத்த உறுதி மொழிகளை ஆட்சிக்கு வந்தபின் நிறைவேற்றுகின்ற அரசு தி. மு. கழக அரசு, வெறும் கோஷங்கள் மூலம் ஆட்சிக்கு வந்தபின் வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் இருப்பது இந்திரா காங்கிரசு"

என்று, மைசூர் மாநில முன்னாள் முதலமைச்சர் வீரேந்திர பட்டீல் கூறினார்.

பெங்களூர் — அசோக் நகர் தி.மு.க. சார்பில் பெங்களூர் பகுதியில் அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழாக் கொண்டாடப்பட்டது.

விழாவுக்குத் தோழர் பச்சையப்பன் தலைமைதாங்கினார்.

தமிழகப் பொதுப் பணித் துறை அமைச்சர் எஸ், ஜே சாதிக் பாட்சா, கருநாடக மாநில முன்னாள் முதலமைச்சர் வீரேந்திர பட்டீல், தி. திராவிடமணி எம்.எல். ஏ., க. சோழன், சிவசங்கர் மற்றும் பலர் பேசினர்.

"அண்ணா அவர்கள், அறுவைச் சிகிச்சைக்குப் பின் வீட்டிலிருந்த நேரம்; நெல்லூர் செல்லும் வழியில் அவரைப் பார்க்கச் சென்றேன்; மாடியில் இருந்த அண்ணா அவர்கள் எனது வருகையை அறிந்து கீழே இறங்கி வந்து அரை மணி நேரம் அளவளாவினார்; மிகவும் மெலிந்து காணப்பட்டார்; அன்று மாலை கூட்டத்திற்குச் செல்லவேண்டும் என்றார்; உடல் குன்றியிருந்த நேரத்திலும் மக்களைச் சந்திக்க வேண்டும் என்ற எண்ணமே அவர் உள்ளத்தில் குடியிருந்தது.

நான் அறிந்த வரையில் மக்களால் விரும்பப்பட்ட மாபெரும் தலைவர் அண்ணா.

ஏழைகள் -- பாட்டாளி வர்க்கத்தினர் வாழ்வு வளம் பெறத் தமது வாழ்நாளெல்லாம் பாடுபட்டு உயிர் நீத்த உத்தமர் !

அண்ணா பிறந்த நாள் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுகின்ற இந்த நேரத்தில், அவர் விட்டுச் சென்ற பணிகளையும் மேற்கொண்டு நாம் பின்பற்ற வேண்டும்; அந்த வகையில் அண்ணாவின் கொள்கையைப் பின்பற்றி அவர் விட்டுச் சென்ற பணிகளை எனது அருமை நண்பர் கலைஞர் கருணாநிதி அவர்கள் ஏற்று சிறப்பாக ஆட்சி புரிந்து வருகிறார்.

மறைந்த பேரறிஞர் அண்ணாவிற்கு மரியாதை செலுத்தும் வாய்ப்பை நல்கிய கழகத் தோழர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்."

திருச்சி மாவட்டச் செயலாளர் அறிவிப்பு

"புதுக்கோட்டை நகர தி. மு. க. செயலாளர் எம். எஸ். அப்துல் மஜீத் உடல்நலக் குறைவால் புதுக்கோட்டை அரசினர் மருத்துவமனையில் இருக்கிறார்; அவர் இன்னும் பத்து நாட்கள் மருத்துவமனையில் இருப்பார்; அது வரையில், பொறுப்புக்களை துணைச்செயலாளர் கவனித்து வருவார்"

என்று திருச்சி மாவட்ட தி. மு. க. செயலாளர் எம். எஸ். வெங்கடாசலம் அறிவிக்கிறார்.

மோட்டார் ஓட்டுநர்களுக்குத் தனிப் பயிற்சிப் பள்ளி

அமைச்சர் இராமச்சந்திரன் தகவல்

திருச்சி, அக். 17—

'கார் ஓட்டுநர்களுக்குப் பயிற்சி அளிக்கத் தனிப் பயிற்சிப் பள்ளி துவக்கப்படும்; மதுரை -- சென்னை -- கோவை -- குடந்தை ஆகிய நான்கு இடங்களில் இந்தப் பள்ளிகள் தொடங்கப்படும்"

என்று போக்குவரத்து அமைச்சர் எஸ். இராமச்சந்திரன், இங்கு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்; அவர் மேலும் கூறியதாவது :—

"இது தவிர, தொழிற்பயிற்சிப் பள்ளிகளில் கார் ஓட்டுதல் கற்றுக் கொடுக்கத் தனிப் பிரிவு ஏற்படுத்தும்படி கோரப்பட்டிருக்கிறது.

குடிபோதையில் கார் -- லாரி -- பஸ்கள் ஓட்டினால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்; பஸ்களை நாட்டுடைமையாக்குவதற்குமுன், பழுது பார்க்கும் தொழிற்சாலைகளை விரிவுபடுத்தத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

இப்போது சேரன் -- சோழன் -- பாண்டியன் -- பல்லவா என்று நான்கு போக்குவரத்துக் கழகங்கள் உள்ளன; மேலும் ஒரு போக்குவரத்துக் கழகம் வட ஆற்காடு -- தர்மபுரி -- சேலம் ஆகிய மாவட்டங்களில் தொடங்கப்படும்; இதற்கான பெயரை முதல்வர் விரைவில் அறிவிப்பார்.

திருச்சி -- கோவை -- மதுரையிலிருந்து விரைவுப் பேருந்துகளைவிட அரசு தீர்மானித்துள்ளது."

தெ. ஆ. மாவட்ட தி. மு. க. தோழர்கட்கு :

"கிளைக் கழக அனுமதி இல்லாமல் கழகச் சார்பு மன்றமோ, படிப்பகமோ துவக்கப்படக் கூடாது.

ஏற்கனவே அனுமதியில்லாமல் இயங்கும் சார்பு மன்றங்கள் -- துணை மன்றங்கள் -- படிப்பகங்கள் உடனடியாகச் சம்பந்தப்பட்ட கிளைக் கழக அனுமதியைச் சட்டதிட்டப்படி பெற வேண்டும்.

எம். ஜி. ஆர். மன்றங்கள் -- ரசிக மன்றங்கள் என்ற பெயரால், கழகத்தை எதிரிகளுக்குக் காட்டிக் கொடுக்கின்ற வகையிலும் எதிர்க் கட்சிகளே பேசுவதற்கு அஞ்சும் இழிமொழிகளில் கழகத் தலைவர் கலைஞர் அவர்களையும், பொதுச் செயலாளர் நாவலர் அவர்களையும், மற்றவர்களையும் பழித்து எழுதப்படுவது -- கழகக் கொடியை இறக்குவது -- கழகத் தலைவர்கள் படத்தை உடைப்பது போன்ற வன்முறையில் ஈடுபடுபவர்கள்மீது கிளைக் கழகம் கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும் என்பதையும் இத் தொடர்பில் கழகத் தோழர்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்"

என்று தென்னாற்காடு மாவட்ட தி. மு. க. செயலாளர் எம். செல்வராசு அறிவிக்கிறார்.

செய்திக்கு மறுப்பு

சேலம், அக். 14—

சேலம் தோழர் எஸ் நாகரத்தினம் அறிவிப்பதாவது :—

"14—10—72 (வெளியூர்) தேதியிட்ட 'தினமணி' நாளேட்டில், 'சேலம் ஜில்லா எம். ஜி. ஆர். ரசிகர் மன்றத் தலைவர் நாகரத்தினத்தின்மீது அந்த மன்றத்தின் மெம்பர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நிறைவேற்றினர்; இதையடுத்து தலைமைப் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்' -- இத்தகவலை, அனைத்துலக எம். ஜி. ஆர். ரசிகர் மன்றத்தின் காரியதரிசி முசிறிப்புத்தன் தெரிவித்தார் -- என்று செய்தி வெளியிட்டுள்ளனர்; இது பொய்ச் செய்தியாகும்.

பேரறிஞர் அண்ணா அவர்களால் வகுத்துத் தரப்பட்ட வழியில் தமிழ்நாட்டை நடாத்திச் செல்லும் டாக்டர் கலைஞர் அவர்களின் தொண்டனான நான், 14—3—72-ந் தேதி சேலம் மாவட்டத்திலுள்ள எம். ஜி. ஆர். ரசிகர் மன்றங்களை முறைப்படுத்தவும் -- ஒழுங்குபடுத்தவும் -- புதிய ரசிகர் மன்றங்களை தொடங்குபவர்களை ஊக்குவிக்கவும், மாவட்ட எம். ஜி ஆர். ரசிகர் மன்ற அமைப்புத் தலைவராக முசிறிப்புத்தனால் நியமனம் செய்யப்பட்டேன்.

சேலம் மாவட்ட எம். ஜி ஆர். ரசிகர் மன்றத்திற்கு உறுப்பினர்களோ, செயலாளரோ, பொருளாளரோ கிடையாது; நானே அமைப்புத் தலைவனாக இருந்து சில நல்ல காரியங்களைச் செய்துள்ளேன்; அப்படியிருக்க, உறுப்பினர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்தது எப்படி? நியமனம் செய்தவரும் -- செய்யச் சொல்லியவரும் (திரு எம். ஜி. ஆர்.) [illegible] என்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றியிருக்கலாம்.

திரு. எம். ஜி. ஆர். தற்காலிகப் பதவிநீக்கம் செய்யப்பட்ட நாள் முதல் 13—10—72-ந் தேதி நண்பகல் வரையில் சேலம் மாவட்ட—நகர எம். ஜி. ஆர். ரசிகர் மன்றத் தோழர்கள் என்னைச் சந்தித்தும், தபால் மூலமாகவும், 'என்ன செய்யலாம்' என்று கேட்டபோதெல்லாம், 'பொறுமையாக இருப்போம்; தி.மு.க. மேலிடம் முடிவு செய்த பின் பேசுவோம்' எனக் கேட்டுக் கொண்டேன்; அதற்கு மதிப்பளித்து அமைதி காத்தனர்; அவர்களுக்கெல்லாம் நன்றி.

பின்பு என் விருப்பத்திற்கு மாறாக 13—10—72-ல் கண்டன ஊர்வலம் நடத்தினர்; உண்மை இதுதான்; இப்போது சேலத்தில் அமைதி நிலவுகிறது; இது பொறுக்காத சிலரின் தூண்டுதலுக்கு செவி சாய்க்காமல பொதுக் குழுவின் கருத்துக்கு மதிப்புக் கொடுத்து, 'அறிஞர் அண்ணாவின் அமைதி வழிபேணும் வழி' என டாக்டர் கலைஞர் அவர்களின்பால் அன்பு கொண்டு அவர் கரத்தினை பலப்படுத்திட வேண்டுமென சேலம் மாவட்டம் முழுவதிலுமுள்ள நல்ல உள்ளம் படைத்த எம். ஜி ஆர். ரசிகர் மன்ற உறுப்பினர்களைக் கரங்கூப்பி வேண்டுகிறேன்.

நான் இன்றுமுதல் சேலம் மாவட்ட எம் ஜி ஆர். ரசிகர் மன்ற அமைப்புத் தலைவர் பதவியை இராஜினாமா செய்கிறேன். டாக்டர் கலைஞர் முதல்வர் அவர்களின் கரத்தினைப் பலப்படுத்திட இலட்சோப லட்சம் தி.மு.க. தொண்டர்களில் நானும் ஒருவனாக என்றும் போல இருப்பேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

பொள்ளாச்சியில் எம்.ஜி.ஆர். மன்றங்கள் கலைப்பு

பொள்ளாச்சி அக். 18—

பொள்ளாச்சி தி. மு. க. நகரச் செயலாளர் மு தேவராசன் அறிவிப்பதாவது :—

"தொடக்க நாள்முதல் கழகத்துக்காகக் குடும்பத்தை மறந்து -- வாழ்க்கையில் பல தொல்லைகளுக்கு ஆளாகிச் சதி வழக்குகளில் சிக்கி -- காங்கிரசு அரசினால் அல்லற்பட்டுக் கழகத்திற்காகப் பணியாற்றிவரும் கழகத் தலைவர்கள் -- செயலாளர்கள் -- முன்னணித் தோழர்கள் அனைவரையும் மக்கள் மத்தியில் இழிவுபடுத்தியும், பேசியும் எழுதியும் வரும் எம்.ஜி.ஆரின் நடவடிக்கை எங்கள் உள்ளத்தைப் புண்படுத்தியுள்ளது.

இனியும் அவர் பெயரில் மன்றம் வைத்து இயங்குவது கழகத்திற்குத் துரோகம் செய்வதாகும்; எனவே, பொள்ளாச்சி நகரில் இயங்கிவரும் எம்.ஜி.ஆர். மன்றங்கள் அனைத்தும் கலைக்கப்பட்டுவிட்டன என்பதைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்"

அண்ணனே ---மன்னித்துவிடு !

'நீலத் திரைக்கடல் ஓரத்தில் நித்திரை கொண்டிருக்கின்ற என் அண்ணனே -- ஒரு கனி என் மடியில் விழுந்தது; அதை எடுத்து என் இருதயத்தில் வைத்துக்கொண்டேன்; அதுதான் எம்.ஜி.ஆர்.' என்று ஒருமுறை கூறினாய்.

'நீ மறைந்த பிறகு, 'உன் இருதயத்தை எனக்குக் கொடு' என்று கேட்டேன்; நீயும் தந்துவிட்டாய்; ஆம் -- அந்தக் கனியோடுதான் உன் இருதயத்தைப் பெற்றுக்கொண்டேன்; ஆனால், இன்று அந்தக் கனியை வண்டு துளைத்துவிட்டது; இனியும் வைத்திருந்தால் நீ கொடுத்த இருதயத்தையும் துளைத்துவிடும் என்பதற்காகத்தான் அந்தக் கனியை எடுத்தெறிந்துவிடும் நிலைமைக்கு ஆளாக்கப்பட்டேன்; என்னை மன்னித்துவிடு அண்ணா!"

சென்னைக் கடற்கரைச் சீரணி அரங்கில் 15—10—72 அன்று நடந்த கூட்டத்தில் கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் தம் பேச்சின் இறுதியில் இவ்விதம் குறிப்பிட்டார்; இதற்குமேல் உணர்ச்சிமேலிட்டால் பேச முடியாமல் தமது பேச்சை முடித்துக்கொண்டார்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கலைஞர் :—"அது எப்படிக் கூற முடியும்? நீங்கள் வந்து கேட்டுவிட்டுப்போன பிறகு யாராவது தவறு செய்வதாகத் தெரியவந்தால் அவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டியதாகத்தான் இருக்கும்."

கேள்வி :—"15 நாள் காலக்கெடு கொடுத்துவிட்டு, அதற்கும் பதில் எழுதுவதற்குமுன் தீர்ப்பு அளித்துவிட்டார்கள் என்று எம். ஜி. ஆர். கூறுகிறாரே?"

கலைஞர் :— "பொதுச்செயலாளர் நாவலர் அவர்கள் விளக்கம் கேட்டு எழுதியதற்குப் பதில் எழுதாமல், அவரது ஸ்டுடியோவில் நடத்திய கூட்டங்களில் கழகத் தலைமையைத் தாக்கியும்—கழகக் கட்டுப்பாட்டைக் குலைக்கும் வகையிலும் மேலும் நிறையப் பேசியிருக்கிறார்; கழக விரோத ஏடுகளாகப் பல நாட்களாக இருந்து வருகின்ற 'நாத்திகம்'—'நவசக்தி' 'அலையோசை' போன்ற ஏடுகளைத்தான் படிக்கவேண்டும் என்றுகூட ஒரு கருத்தையும் வெளியிட்டுள்ளார்; அவருடைய பேச்சு 'நாத்திகம்' பத்திரிகையில் வெளிவந்திருக்கிறது; நேற்று வரையில் இவரைக் கடுமையாகத் தாக்கி வந்தது மட்டுமல்லாமல், ஆபாசமாகவும் விமர்சித்துக்கொண்டிருந்த இந்தப் பத்திரிகைகள் எல்லாம் இன்று அவருக்கு உடன்பாடான பத்திரிகைகளாக ஆகிவிட்டது வேடிக்கையாக இருக்கிறது.

"நாவலருடைய கடிதத்திற்குப் பதில் அனுப்புவதற்குமுன் தீர்ப்பு அளித்துவிட்டார்களே—என்று கூறுகின்ற எம். ஜி. ஆர்., நாவலர் கடிதத்திற்குப் பதில் எழுதுவதற்கு முன்பு கழகத்தைப் பற்றியும்—கழகத் தலைவர்களைப் பற்றியும் எதிரிகளே கூடச் சொல்லக் கூசுகின்ற வார்த்தைகளைச் சொல்லித் தாக்கிப் பேசியிருக்கிறார்—அறிக்கைகள் விட்டிருக்கிறார்.

"இப்போதும் கழகச் சட்டத் திட்டத்தின்படி, அவர் தற்காலிகமாகத்தான் விலக்கி வைக்கப்பட்டிருக்கிறார்: இறுதியான முடிவு அவரது சமாதான விளக்கக் கடிதத்திற்குப் பிறகுதான் எடுக்கப்படும்; அல்லது அவரது பதிலுக்காக நிர்ணயிக்கப்பட்டிருக்கின்ற காலக் கட்டத்திற்குப் பிறகு இறுதி முடிவு எடுக்கப்படும்."

கேள்வி :—"இதையடுத்து, மாநில அளவில் கட்சியில் களை எடுப்பு எடுக்கப்படுமா?"

கலைஞர் :—"களைகள் தோன்றினால் அவைகள் களைந்தெறியப்படும்; ஆனால் களைகள், முன்கூட்டி நோட்டீசு கொடுத்துவிட்டுத் தோன்றுவதில்லை."

கேள்வி :—"மாவட்ட அளவில் சந்தேகப்படுபவர்கள் பற்றிய விவரங்களைத் தெரிவிக்குமாறு மாவட்டச் செயலாளர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றனரா?"

கலைஞர் :—"அப்படி யாரும் இருப்பதாகத் தெரியவில்லை; ஒன்றிரண்டு பேர் இருப்பதாக இருந்தாலும், அவர்கள் பற்றிய விவரங்களை மாவட்டச் செயலாளர்கள் தெரிவிப்பார்கள்; அப்படிப்பட்டவர்கள் இருப்பார்களேயானால் அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும்."

கேள்வி :—"சட்டமன்றக் கூட்டம் எப்போது நடைபெறும்?"

கலைஞர் :—"அதுபற்றி நான் அறிவிக்கக் கூடாது; உங்களுக்குச் சந்தேகம் வேண்டாம்; சட்டமன்ற—நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலமாக இருக்கிறார்கள்

கணக்குக் கேட்பவரின் உள் நோக்கம் என்ன?

கழகத்தின்மீது சாட்டும் குற்றச்சாட்டு புதியதல்ல

கருத்திலே மாறுபட்டுவிட்ட பிறகு கவலைப்படத் தேவையில்லை

பொதுச்செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் குற்றச்சாட்டு

சென்னை, அக். 18—

"எம். ஜி ஆர். அவர்கள், கழகத்தின் கட்டுப்பாட்டை மீறிய காரணத்தாலேதான் மிக வருத்தத்தோடு அவர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டியதாயிற்று.

"சாதாரணமானவர்கள் கட்டுப்பாட்டை மீறினால், கூப்பிட்டுப் பேசியே சரிசெய்துவிடலாம், கழகத்தின் முக்கியப் பொறுப்பிலே இருக்கின்ற எம் ஜி. ஆர். கட்டுப்பாட்டை மீறினால் கழகத்தின் நாணயத்தை—இலட்சோபலட்சம் தொண்டர்களின் நல்லுழைப்பை மற்றவர்கள் எப்படி நினைப்பார்கள் என்பதால்தான் நடவடிக்கை எடுத்தோம்; மிக வருத்தத்தோடுதான் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதே தவிர அதில் எந்தவித மகிழ்ச்சியும் எங்களுக்கு இல்லை.

"ஒரு குவளை தண்ணீர் வெதும்பினால் அண்டாத் தண்ணீரை ஊற்றலாம்; அண்டாத் தண்ணீர் வெதும்பினால் குளத்து நீரை ஊற்றலாம்; குளமே வெதும்பினால் ஆற்று நீரை ஊற்றலாம்; ஆறே வெதும்பினால் கடல் தண்ணீரை ஊற்றலாம்; கடல் தண்ணீரே வெதும்பினால்.......

"கழகக் கட்டுப்பாட்டை மீறுவோர் யாரானாலும் கழகம் நடவடிக்கை எடுக்கும்; இவர்மீது நடவடிக்கை எடுக்காவிட்டால் மற்றவர்களுக்கு ஒரு நீதி—எங்களுக்கு ஒரு நீதியா?' என்று கேட்கமாட்டார்களா?"

என்று பொதுச்செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், 15—10—72-ல் திருவல்லிக்கேணி கடற்கரையிலுள்ள சீரணி அரங்கில் நடைபெற்ற பொதுக்குழு முடிவுகள் விளக்கக் கூட்டத்தில் உரையாற்றுகையில் சுட்டிக்காட்டி வினவினார்; அவர் ஆற்றிய உரை வருமாறு:—

"திராவிட முன்னேற்றக் கழகம் எப்படிப்பட்ட பணியிலே தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் அறியாதது அல்ல.

பேரறிஞர் அண்ணா அவர்களின் பண்பாட்டுத் திறனாலும்—ஆற்றல் திறனாலும் வளர்க்கப்பட்டது இந்தக் கழகம்; அதனைக் காக்கும் வகையிலேதான் நாம் பணியாற்றி வருகிறோம்.

நாவன்மையாலும்—சொல்வன்மையாலும் அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்ட கழகத்திலே நாம் சேர்ந்தது பட்டம்—பதவிகளை எதிர்பார்த்து அல்ல; 'உழைக்கத்தான் அழைக்கிறேனே தவிர, உன்னை பிழைக்க வைக்க என்னால் முடியாது' என்று தான் அண்ணா அவர்கள் கூறினார்கள்; அந்த நாளிலேதான் நாம் கழகத்தில் சேர்ந்தோமே தவிர, பட்டம் கிட்டுமென்றோ, பதவி கிட்டுமென்றோ எண்ணி நாம் கழகத்திற்கு வந்தவர்களல்லர்!

கழகத்திலே சேர்ந்தால் இன்னல்கள் ஏற்கவேண்டி வரும்—இடர்ப்பாடுகளை ஏற்க வேண்டிவரும்—பணபலம், படைபலம், பத்திரிகை பலம் படைத்தவர்களின் எதிர்ப்பையெல்லாம் தாங்கவேண்டி வரும் என்பதையெல்லாம் உணர்ந்துதான் கழகத்திலே சேர்ந்தோம்; அண்ணா அவர்கள் நடத்திய போராட்டத்திலெல்லாம் பங்கு கொண்டோம்.

கொட்டும் மழையிலேதான் திராவிட முன்னேற்றக் கழகம் துவக்கப்பட்டது; கொட்டும் மழையிலே அப்படித் துவக்கப்பட்ட கழகத்தை மெல்ல மெல்ல நாடு நகரங்களிலும், பட்டிதொட்டிகளிலும் நாம வளர்த்து வந்திருக்கிறோம்.

தூற்றலிலே தொடங்கிய நம்முடைய கழகத்திற்கு அன்றே மாற்றாரின் தூற்றல் இருந்தது; உடல்—கொட்டும் மழையைத் தாங்கிக் கொண்டது; உள்ளம்—மாற்றார் கொட்டிய தூற்றல்களைத் தாங்கிக் கொண்டது. நமக்கு பல சிரமங்கள் ஏற்பட்டபோதும்—மாற்றார் நம்மீது இழிசொல், பழிசொல் வீசியபோதும், 'எதையும் தாங்கும் இதயம் வேண்டும்' என்று அண்ணா அவர்கள் சொன்னார்கள்; அந்த வாசகங்களைத்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் துயில் கொள்ளும் கல்லறையிலும் பொறித்திருக்கிறோம்! அண்ணா அவர்கள் சொல்லித் தந்த அந்தப் பாங்கிலேதான் நாம கழகத்தைக் காத்து வருகிறோம்.

கழகத்தை ஆட்டி அசைத்துவிடலாம்—இல்லாததையும், பொல்லாததையும் பேசி அழித்துவிடலாம்—ஒழித்துவிடலாம் என்று நாள்தோறும் முயன்றவர்களையெல்லாம் தாண்டித்தான் நாம் வளர்ந்திருக்கிறோம்!

இடருற்ற நேரத்தில் கண்கள் கலங்கும்; அப்போதெல்லாம், 'கண்ணீரைத் துடைத்துக்கொள்—கடமையை ஆற்று' என்றுதான் கூறுவார் அண்ணா! அப்படி வளர்ந்த நாம், கழகத்தின் கட்டுப்பாட்டைக் காக்க வேண்டியதாலேதான் இன்று சில பல நடவடிக்கைகளை மேற்கொள்ள நேர்ந்தது.

செயற்குழு—பொதுக்குழுக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்த நேரத்தில் இப்படியெல்லாம் நடக்கும் என்று நாம் எதிர்பார்க்கவில்லை.

எம். ஜி. ஆர்.-மீது நடவடிக்கை எடுத்தோம்; என்னாலும் அவருடைய உழைப்பை நாம மறந்துவிடவில்லை; கழகச் சட்ட திட்டத்தின்படி விளக்கம் கேட்டு, செயற்குழுவிலும்—பொதுக்குழுவிலும் அவர் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து விவாதித்தோம்.

கழகத்தின் பொதுக்குழுவிலே இருக்கின்ற 310 பேரும்—செயற்குழுவிலே இருக்கின்ற 31 [illegible]ரும் சாதாரணமானவர்களோ—ஏனோதானோக்களோ அல்லா[illegible] முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அத்தனைப் பேரும் அந்த நடவடிக்கைக்கு ஒப்புதல் அளித்திருக்கிறார்கள்.

நடவடிக்கை எடுத்ததும்—அதற்குப் பதிலளிக்க வேண்டியதும், எங்களுக்கும்—அவருக்கும் உள்ள பிரச்சினையாகும்; இதிலே மாற்றுக் கட்சிக்காரர்களுக்குத்தான் எத்தனை அக்கறை!

ஒரு கணவனும்—மனைவியும், 'நடுரோட்டிலே இதைத்தான் பேசலாம்—வீட்டுக்குள்ளே பேசத்தக்கவை இவை இவைதான்' என்பதற்கு வரைமுறை இருக்கிறது; வீட்டுப் பிரச்சினைகளை வீதிக்கு எந்தப் பெண்ணும் கொண்டுவரமாட்டாள் அப்படிக் கொண்டுவருபவளை எவனும் மனைவியாக ஏற்றுக்கொள்ளமாட்டான்; எனவே, எம். ஜி ஆர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கும் உரிய விளக்கம்தர அவருக்கு 15 நாள் தவணை தரப்பட்டிருக்கிறது.

1949-ல் துவங்கப்பட்ட கழகத்தில் 1953-ல் எம். ஜி ஆர். சேர்ந்தார்; அப்போதிருந்து அவருக்கு நம்முடைய கணக்கின்மேல் இதுவரை இல்லாத சந்தேகம் இப்போது வந்திருப்பது ஏன்?

நானோ, கலைஞரோ மட்டுமல்ல—ஒவ்வொருவருமே கணக்கு வைத்திருக்கிறோம்; நாங்கள் அப்படியே கணக்கில் தவறு செய்திருந்தால், செயற்குழுவிலும்—பொதுக்குழுவிலும் இருக்கின்ற அத்தனைப் பேரும் விட்டுவிடுவார்களா? அவர்களெல்லாம் என்ன—அச்சடித்த பதுமைகளா?

இரண்டாண்டுக் காலமாகக் கழகத்தின் கணக்கு, வருமான வரித் தணிக்கை அதிகாரிகளிடமே காட்டப்பட்டு வருகிறது.

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி—து. ப. அழகமுத்து—இராம. அரங்கண்ணல்—டி. கே. பொன்னுவேலு—இராசகோபால் ஆகிய ஐவரைக் கழகத்தின் தணிக்கைக் குழுவினராக நியமித்திருக்கிறோம்; நாங்கள் தவறு செய்தால் இவர்களில் எவராவது எங்களை விட்டுவிடுவார்களா?

நாம் எதிர்க் கட்சியினராக இருந்தபோதே, 'சட்டமன்றத்தில் கணக்கு வைக்கப்பட வேண்டும்' என்ற தீர்மானத்தை திரு மாதவன் கொண்டுவந்தபோது, அதைக் காங்கிரசார் தோற்கடித்துவிட்டனர்!

சட்டமன்ற உறுப்பினர்—அவரது மனைவி, பிள்ளைகள் ஆகியோரின் கணக்கை சட்டமன்றத்தில வைக்க வேண்டுமென்று 1969-ம ஆண்டில் சட்டம் நிறைவேற்றியவர் கலைஞர்.

இந்தியாவின் எந்த மாநிலத்திலும் இல்லாத இந்திரா காந்தியே நிராகரித்த அந்தச் சட்டத்தை நிறைவேற்றி—அதன்படி கணக்கும் தரப்பட்டு வருகிறது.

அப்படி நாங்கள் மூன்றாண்டுக் காலமாகத் தந்து வருகின்ற கணக்கில் தவறு இருந்தால் சொல்லட்டுமே!

சட்டமன்றத்தில் நாங்கள் தரும் கணக்கின் நகல் கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த கே. டி. கே. தங்கமணியிடமும் தரப்படும்; சுதந்தரா கட்சி உறுப்பினரான ஹாண்டேவுக்குக் கிடைக்கும்; பொன்னப்ப நாடாருக்கும் கிடைக்கும்.

எம் ஜி. ஆர்.தான், முதலாண்டில் மட்டுமே கணக்குத் தந்தாரே தவிர, கடந்த இரண்டாண்டுகளாகக் கணக்குத் தரவில்லை; 13 தடவை நோட்டீசு அனுப்பியும் தரவில்லை.

'யாரைச் சந்தேகிக்கிறீர்கள்' என்று அவரைப் பத்திரிகையாளர்கள் கேட்டிருக்கிறார்கள்; 'யாரையும சந்தேகிக்கவில்லை' என்று கூறியிருக்கிறார்; 'புகார் வந்திருக்கிறதா' என்று கேட்டிருக்கிறார்கள்; 'இல்லை' என்றிருக்கிறார்; 'பின் ஏன கேட்கிறீர்கள்' என்று கேட்டிருக்கிறார்கள்; 'காமராசர் கேட்கிறார்—எதிர்க் கட்சிக்காரர்கள் கேட்கிறார்கள்—அதனால கேட்கிறேன்' என்று சொல்லியிருக்கிறார்.

எங்களுடைய கரங்களும்—கழகத்திலுள்ள கோடானுகோடி தொண்டர்களின் கரங்களும் கறைபடியாத கரங்கள்! நாங்கள் காசற்றவர்கள்—மனதில் மாசற்றவர்கள்' என அண்ணா அவர்களே சொல்லியிருக்கிறார்!

எம். ஜி. ஆர். அவர்களின் குற்றச்சாட்டு நமக்குப் புதியதல்ல; காமராசா குற்றஞ்சாட்டி வீழ்ந்துவிட்டார்! இராஜாஜியும் சொன்னார்—நம்மீது குற்றஞ்சாட்டியவர்களெல்லாம் தோல்விதான் கண்டிருக்கிறார்கள்!

"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்றார் வள்ளுவர்; உண்மை நிலையை உணர்ந்து பாருங்கள்!

'கருத்திலே மாறுபாடு' என்று கூறிவிட்ட பிறகு கவலைப்படத் தேவையில்லை; குற்றச்சாட்டைப் பற்றித்தான் கவலைப்படுகிறோம்; ஆனால் உண்மை எங்கள் பக்கம் இருக்கிறது!"

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்கள் ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.